DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.12**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | அழகுராஜா |
| Father Name | : | பழனியப்பன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.04.2025.

(2வது எதிரி ஆஜர். 3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது பொன்னமராவதி அருகிலுள்ள கருப்புக்குடி கிராமத்தில் குடியிருந்து மளிகை கடை நடத்தி வருகிறேன். கடந்த 2015ம் ஆண்டு நான் அண்ணாமல் ஹோட்டலில் ரூம் சர்வீஸ் வேலை பார்த்தேன். அந்த சமயத்தில் மேற்படி ஹோட்டலுக்கு அ.சா.11 சுரேஷ் என்பவர் மேலாளராக பணிபுரிந்தார். எனக்கு இந்த வழக்கு பற்றிய நபர்களை தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது அ.சா.11 சுரேஷ் மேனேஜராக இருந்த ேஹாட்டலுக்கு ஆரோக்கியபிரபு, வேல்ராஜ் என்ற வேல்முருகன் ஆகியோர் அடிக்கடி ரூம் எடுத்து தங்குவார்கள் என்றும், 21.10.2015ம் தேதி முதல்

06.11.2015ம் தேதி வரை மற்றும் 07.11.2015ம் தேதி முதல் 12.11.2015ம் தேதி வரை மற்றும் 12.11.2015ம் தேதி முதல் 21.11.2015ம் தேதி வரை ரூம் எடுத்து தங்கினார்கள் என்றும், அந்த சமயங்களில் ஆரோக்கிய பிரபுவின் தம்பி சகாய பிரவீன் மற்றும் மாரிமுத்து, கர்ணன், ரமேஷ்பாண்டி ஆகியோர்கள் அடிக்கடி ேஹாட்டலுக்கு வந்து ஆராக்கிய பிரபு, வேல்ராஜ் ஆகியோர்களுடன் பேசிக்கொண்டிருப்பார் என்றும், அவர்களுக்கு டம்ளர் மற்றும் தண்ணீர் பாட்டில்களை எங்கள் ே ஹாட்டலில் சர்வீஸ் பார்க்கும் நான் கொண்டு செல்வேன் என்றும், கடந்த 21.11.2015ம் தேதி இரவு சுமார் 11.30 மணிக்கு சகாய பிரவீனும் மாரிமுத்துவும் பதற்றத்துடன் ஹோட்டல் ரூமிற்கு சென்றார்கள் என்றும், சிறிது நேரம் கழித்து சகாய பிரவீன் கையில் பிளாஸ்டிக் பையுடன் வெளியில் சென்றுவிட்டார் என்றும், அப்போது அவர் ரத்தக்கறை படிந்த துணிமணிகளை மாற்றியிருந்தார் என்றும், 22.11.2015ம் தேதி அதிகாலை 01.30 மணியளவில் அவர்கள் எல்லோரும் ரூமை விட்டு வெளியே சென்றுவிட்டார்கள் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u> இல்லை.

<u>மறு விசாரணை –</u> இல்லை.